ஸ்ரீ சிவ...



SCANNED

Q26:417
N21

நாகநாதபுரம்,

இராமநாதன் செட்டியாரவர்கள் குமாரர்

முத்துக்கருப்பன் செட்டியார்

...களால் இயற்றப்பெற்று

...ரியவீட்டு நகரத்தாரவர்களால்

...ை வடக்குமாசி வீதி,

...ர விலாச அச்சியந்திரசாலையிற்

உ

சிவமயம்.

ஸ்ரீ சிங்கார முருகேசர் திருவடி வாழ்க.

பலவளமிக்கோங்கிய வங்காளமாநகரின்கண் எஜராவீதியில் நாட்டுக்கோட்டைத் தனவைசியர்களால் அமைத்துள்ள நகரப்பெரிய வீடாகிய 34 நிர் தனலெட்சுமி விலாசத்தில் எழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ சிங்கார முருகேசர்

## பதிகம்.

3 JAN

இஃது

காரைக்குடியைச்சார்ந்த நாகநாதபுரத்தில் சிவகோத்திர கோயில் பிள்ளையார்பட்டி திருவேட்பூருடையார் இராமநாதன் செட்டியாரவர்கள் குமாரர்

## முத்துக்கருப்பன் செட்டியார்

அவர்களால் இயற்றப்பெற்று

வங்காளம் பெரிய வீட்டு நகரத்தாரவர்களால்

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்,

**இ. ராம. குருசாமிகோனாரவர்களது**

மதுரை வடக்குமாசி வீதி,

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலை

பதிப்பிக்கலாயது.

147592
சென்னை-600 008

உ

சிவமயம்.

# ஸ்ரீசிங்கார முருகேசர்

## பதிகம்.

### விநாயகர் துதி

### வெண்பா

பூதலங்கள்நாளும் புகழுவங்காளநகர்
நாதன்முரு கேசன்மே னன்பதிகம்—ஓதிடற்கு
மாகனகற் செற்றேன் மருகன் கரிவதனன்
கோகனகத் தாடுணையா கும்.

---

மணிகொண்டவுயர்திவ்ய மணிமகுடமுடியுமலை
மகடன்முலை யுண்டவாயு
மலர்வதனமோரா றுமிலகுகரமீராறும்
வளர்கருணைபொழிவிழிகளு
மணிகொண்டமார்பிற் கடப்பமாலிகையுமே
லான நீறணிமேனியு
மரியசேவற்கொடியும் வடிவேலுமுந் நூலு
மத்தமிசை வைத்ததெண்டும்
பணிகொண்டபாதலம் பணிகின்றவுபயபொற்
பதமுமென் கண்காணவே
பச்சைமயின்மேல்வள்ளி தெய்வானையுடன்வந்து
பட்சம்வைத்தருள்புரிகுவாய்
...டபன்னிரு புயாசலக்கடவுளே

தொண்டருக்கருள்புரியு மாதியேநீதியே
சோதியேமயிலூர்தியே
சூரசம்மாரனே பார்வதிகுமாரனே
சுத்தநீபத்தாரனே
அண்டருக்கரியசே னாபதித்தலைவனே
யலவன்றெழும்புலவனே
ஆம்மான்மகட்குமண வாளனேயேழைபங்
காளனேவேளேகறைக்
கண்டருக்கரியவுப தேசமதுபேசுமென்
கனிவாயனே தூயனே
கந்தனேயெந்தையே சுந்தராநந்தனே
கங்கைதந்தருள் மைந்தனே
தெண்டனிட்டுன துபத மலரையேநம்பினேன்
தெண்டாயுதக்கர்த்தனே
செங்காவிவயல்சூழும் வங்காளநகர்மேவுஞ்
சிங்காரமுருகேசனே. (2)

காதளவுமோடிவா தாடும்வேல்விழிமாதர்
காதலானுன துபாத
கமலத்தை யனுதினவணங்கிநெக்குருகாத
கன்னெஞ்சமுடையபொல்லாப்
பாதகனெனக்கன சினங்கொண்டுகொடியயம
பாசம்வீசிச்சமன்னேர்
பகடேறிவந்தெனைத் தொடருமுனம்நீமயிற்
பரியேறிவந்தாளுவாய்
ஆதரவெனக்குநினை யல்லாமலிப்பெரிய
வகிலத்தில்வேறுமுண்டோ
ாறிருபுயத்தனே யீரிருசிரத்தனை
யன்றுதனையிடுசுத்தனே
முழுமதியனை [illegible]

யுத்தமுதமனையமொழி பேசிப்பசப்பிப்
பொருப்புமுலையால்மயக்கிப்
போர்வேலையொத்தவிரு விழியால்மருட்டிடும்
பொல்லாத மடமாதர்மேல்
மெத்தமயல் கொண்டலையும்
வீணருற வகுதனைவிலக்கிநின் னைமோது
மெய்யடியரொடுகூடி யுன்னடிக்குரியபணி
விடைபுரியவருள் புரிகுவாய்
சுத்தவனசத்தைநிகர் பன்னிருகராசிவ
சுதாகராகருணாகரா
சுந்தராநவவீரர் தங்கட்குமுன்னவா
தும்பிமுகவன்பின்னவா
சித்தமிசைகுடிகொண் டிலங்குகுலதெய்வமே
தெண்டாயுதக்கர்த்தனே
செங்காவிவயல்சூழும் வங்காளநகர்மேவுஞ்
சிங்காரமுருகேசனே, (4)

கந்தமிகுநின்னுடைய கோயில்வலமாகவென்
காலிணைகள்சுற்றிவரவுங்
கமலமலரொத்தவுன் கழலிணைக்கென்றனிரு
கைகள்பணி விடைசெய்யவு
முந்தனைநிதங்கண்டு கண்கள்தெரிசித்திடவு
முன்புகழென்வாய்பாடவு
மோதரியவுனைநினைந் தாறெழுத்தோதிமன
முலையின்மெழுகாயுருகவுஞ்
சந்ததமுமன்பாக நின்னையேஎன்னுடைய
தலைவணங்கவுநல்வரந்
தந்தருளுவாய்திரு முருகந்தன்மருகாகுகா
சரவணபவாஷண்முகா

...வணக்காப்பக ...
147592
சென்னை-600 008.

கோலமிகுதென் றிருச் செந்தூர் திருப்பரங்
குன்றமுயர் திருவாவினன்
குடியேரகந்திருத் தணிகைபழமுதிர்சோலை
குன்றையம்பதிகொடுமளூர்
தாலமிசைபுகழ்கொண் டிலங்குகதிர்காமமலை
சாமிமலைமயிலம்வேளூர்
சலசமலர்வாவிதிகழ் வள்ளியூரானகர்
சங்குபழனங்கடலிலே
ஓலமிடும்பாரூர் முதற்குன்றுதோறாட
லூடனென்னிலாப்பதியெலா
முற்றெங்கணுங்கிருபை வைத்துவிளையாடிவரு
முன்பெருமையென்புகலுவேன்
சீலமிகுமிந்திரகு மாரிதன்மனோகரா
தெண்டாயுதக்கர்த்தனே
செங்காவிவயல்சூழும் வங்காளநகர்மேவுஞ்
சிங்காரமுருகேசனே. (6)

கரமொன்றுசெய்யநா வொன்றுபேசிடவினைக்
காதொன்றுகேட்கநெடிய
கண்ணொன்றுதனையாவ லுடனாடமிகுபுலால்
கமழுமெய்யொன்றுசார
உரமொன்றுகன்னெஞ்ச மொன்றைஎண்ணக்களிப்
புற்றேவிரும்புதடியே
னுள்ளன்பதொன்றுமே யின்றிச்செய்பூசையை
யுகந்தெவ்விதங்கொள்ளுவாய்
புறமொன்றிரண்டைச் சிரித்தெரித்தவருடைய
புதல்வனே தலைவனேபொற்
புள்ளியொன்றுயர்பச்சை மயிலொன்றிலேறிவரு
புண்ணியாவண்ணமிகுநற்
ரமொன்றிரண்டுமூன் றுடையசரவண

அருமையுடனேபெற்ற தாயும்பிதாவுநல்
லாசானுமிகவுமேன்மை
யானகுலதெய்வமுற் பிறவிப்பெரும்பிணிக்
கருமருந்துஞ்சுற்றமும்
பெருமைமிகுகுறைவற்ற செல்வமுந்துணையும்வெகு
பிரியமாயிலகுநட்பும்
பேசரியபரகதி கொடுத்தருள்செய்வள்ளலும்
பிழையனைத்தும்பொறுக்குந்
தருமதுரையானவனும் நீயென்றுவந்துநின்
சரணமேசரணடைந்தேன்
றயவாகவேமன மிரங்கிநின்மலமுத்தி
தந்தெனையுமடிமைகொள்வாய்
திருமயிலிலேறிவரு சேவகாதேவர்தொழு
தெண்டாயுதக்கர்த்தனே
செங்காவிவயல்சூழும் வங்காளநகர்மேவுஞ்
சிங்காரமுருகேசனே. (8)

உந்தனைச்சந்தத நினைந்தனலின்மெழுகாக
வுருகியென்றுபரமெல்லா
மோதியுங்கேளாது போலப்பராமுகம
துற்றருள்செய்யாதிருந்தா
லெந்தனைப்பந்தம தகற்றிப்புரந்திடுவ
ரெவர்சொல்லுவரய்சிந்துசூ
ழிப்புவியிலேயெனக் குனையன்றிவேறுதுணை
யில்லைநானென்செய்குவேன்
பந்தனையகொங்கையுள சுந்தரமிகுங்குறப்
பாவையைமணஞ்செய்தவா
...ரிபாலனே வெற்றிமிகுசீலனே
...வர்கள்சேனபதே

காரார்நெடுந்தடங் கடல்விடந்தனையுண்ட
கயிலாசவாசருக்குங்
காமர்மலைமகளா யுதித்தமங்கைக்குநற்
கங்கைக்குமுரியசுதனே
வாரார்கனத்ததன மாதுதெய்வானைக்கும்
வள்ளிக்குமணவாளனே
மலர்மேவுநான்முகப் பிரமனுக்கும்மிரதி
வரனுக்குமுயர்மைத்துனா
நாராயணற்கும்விண் ணவர்பிரானுக்குநறு
நளினமாதுக்குமருகா
நாகமுகனுக்கிளையதோகைமயில்வாகனா
நவவீரர்முன்வந்தவா
சீரார்கடப்பமலர் மாலையணிமார்பனே
தெண்டாயுதக்கர்த்தனே
செங்காவிவயல்சூழும் வங்காளநகர்மேவுஞ்
சிங்காரமுருகேசனே

## வாழி.

வேதமா மகங்கள்வாழி மேகநல்லறங்கள்வாழி
பூதலமுழுதும்நீதப் புரவலன் செங்கோல்வாழி
தாதியல் நகரத்தார்கள் தழைத்துநீடூழிவாழி
ஓதுமிப்பதிகங் கேட்போருரைப்பவர் வாழிமாதோ.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ வணக்காப்ப
47592